இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

ஆசிசரியர் கல்வியில் முதுகலைமாணி - பகுதி 11

இறுதிப் பரீட்சை - 2006

ESP 2263 - ஆய்வும் மதிப்பீடும்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

---

திகதி: 01.03.2006 நேரம்: மு.ப 10.00 - பி..ப 1.00 வரை

---

மூன்று(03) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.

ஒவ்வொரு விடையும் தனித்தனியான வெவ்வேறு புத்தகங்களில் தரப்படல் வேண்டும்.

01. (i) பரிசோதனமுறை ஆய்வுக்குப் பொருத்தமான யாதாயினும் ஆய்வுப் பிரச்சினையை குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

(ii) அதற்கான குறிப்பான ஆய்வு வினாக்கள்/ கருதுகோள்களை குறிப்பிட்டு, ஒவவொரு ஆய்வு வினாக்கள்/கருதுகோள்கள் தொடர்பான மாறிகளையும் குறிப்பிடுக.

(40 புள்ளிகள்)

(iii) உங்களின் ஆய்வின் மாதிரியெடுத்தல் வடிவமைப்பு, தரவு சேகரித்தல் செயன்முறை என்பவற்றை விளக்குக.

(30 புள்ளிகள்)

(iv) உங்களின் ஆய்வுக்குப் பொருத்தமான பரிசோதனை சார் ஆய்வு வடிவமைப்பின் எல்லை/வரையறைகளை ஆராய்க.

(20 புள்ளிகள்)

02 (i) செயல் ஆய்வு வடிவமைப்பைப் பயன்படுத்தி ஆய்வு செய்வதற்குப் பொருத்தமான ஆய்வுப் பிரச்சினைகள் இரண்டைக்(02) குறிப்பிடுக.

(2 0 புள்ளிகள்)

(ii) அளவை(Survey research) ஆய்வு முறை, செயல் ஆய்வு முறைகளின் பிரதான இயல்புகளை ஒப்பிட்டு ஆராய்க.

(40 புள்ளிகள்)

((iii) கல்வி அமைப்பில் ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்காக செயலாய்வு வடிவமைப்பைப் பயன்படுத்துவதன் பிரதான அனகூலங்களைப் பரீட்சிக்க.

(40 புள்ளிகள்)

03. (i) பண்புசார் ஆய்வின் விசேட இயல்புகளை விபரித்து, அவை அளவுசார் ஆய்வின் விசேட இயல்புகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை விளக்குக.

(30 புள்ளிகள்)

(ii) தனியாள் வகை ஆய்வு முறையைப் பயன்படுத்தி கற்கைக்குரிய பொருத்தமான ஒரு ஆய்வுப் பிரச்சினையைக் குறிப்பிட்டு, உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(16 புள்ளிகள்)

(iii) மேலுள்ள தனியாள் வகை ஆய்வினை செயற்படுத்துகையில் நீர் பின்பற்றும் பிரதான படிகளை சுருக்கமாக விபரிக்க.

(30 புள்ளிகள்)

(iv) தனியாள்வகை ஆய்வுமுறையின் பிரதான எல்லை/வரையறைகள் மூன்றை விளக்குக.

(24 புள்ளிகள்)

04. வகுப்பொன்றில் 40 மாணவர்கள் கொண்ட ஒரு குழு கணிதப் பாடத்தில் பெற்ற புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 16 | 32 | 46 | 58 | 63 | 58 | 74 | 79 |
| 33 | 41 | 25 | 62 | 71 | 47 | 66 | 46 |
| 37 | 45 | 37 | 27 | 34 | 82 | 31 | 68 |
| 56 | 22 | 70 | 20 | 30 | 40 | 52 | 12 |
| 92 | 16 | 76 | 65 | 80 | 54 | 64 | 39 |

(i) 37 - 48 என்பதை ஒரு வகுப்பாயிடையாகக் கொண்டு மேற்தரப்பட்ட புள்ளித் தொடைக்கு மீடிறன் பரம்பல் அட்டவணையொன்று தயாரிக்குக.

(10 புள்ளிகள்)

(ii) நிலைக்குத்து அச்சில் மீடிறன்களின் அசையும் சராசரியைக் குறித்து மேல் தரப்பட்ட தரவினை மீடிறன் வளையி மூலம் காட்டுக.

(15 புள்ளிகள்)

(iii) வளையியின் வடிவத்தினைப் பற்றி மதிப்புரையொன்று எழுதுக.

(10 புள்ளிகள்)

(iv) உத்தேச இடை (37-48) என்ற வகுப்பாயிடையில் உள்ளதாகக்கெண்டு இப்பரம்பலின் கூட்டல் இடையைக் கணிக்குக.

(20 புள்ளிகள்)

(v) மீடிறன் பரம்பலின் ஆகாரம், இடையம், என்பவற்றுடன் ஒப்பிடுகையில் மையநிலை அளவீடாக கூட்டல் இடை மிகப் பொருத்தமானதாக அமைவது ஏன் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

(vi) நியமவிலகலைக் கணிக்குக

(20 புள்ளிகள்)

(vii) வீச்சு, காலணை இடையவீச்சு, என்பவற்றுடன் ஒப்பிடுகையில், சிதறல் அளவீடாக நியம விலகல் மிகப் பொருத்தமானதாக அமைவது ஏன் என்பதை விளக்குக.

(15 புள்ளிகள்)

05. (i) கல்விசார் ஆய்வுகள் நடத்துகையில், இலக்கிய மீளாய்வு செய்வதன் முக்கியத்துவத்தினை விளக்குக.

(20 புள்ளிகள்)

(ii) இலக்கிய மீளாய்வில், பயன்படுத்தப்படும் பல்வேறு மீளாய்வு வகைகளை உதாரணங்கள் மூலம் விபரிக்குக.

(30 புள்ளிகள்)

(iii) இலக்கிய மீளாய்வு செயன்முறையில் உள்ளடக்கப்படும் பிரதான படிகளை விபரிக்க.

(30 புள்ளிகள்)

(iv) இலக்கிய தகவல்களை கண்டறிவதற்கு பயன்படுத்தக்கூடிய பிரதான மூலங்களை ஆராய்வு

(20 புள்ளிகள்)

06. பின்வரும் தலைப்புகளில் ஏதாவது மூன்றிற்கு(03) சிறு குறிப்புக்கள் எழுதுக.

(i) ஒரு சிறந்த ஆய்வு முன் மொழிதலில் இருக்க வேண்டிய இயல்புகள்.

(ii) ஒரு சிறந்த தரவு சேகரித்தல் கருவியில் இருக்கவேண்டிய பண்புகள்.

(iii) ஆய்வு ரீதியான நேர் காணலின் குறிப்பான இயல்புகள்

(iv) ஆய்வு செயன்முறை ஒன்றின் பிரதான படிகள்

(v) ஆய்வு ஒழுக்கவியல் கோவையில் எற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்கள்.

(ஒவ்வவொன்றுக்கும் $33\frac{1}{3}$ புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)